### களவாடப்பட்ட ஒவ்வொரு வாக்கின் கனத்தையும் பீகார் மண்ணில் உணர முடிகிறது!

# பீகாரில் வாக்கு அதிகாரப் பயணத்தில் நானும் இணைந்தேன்!

## மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

பாட்னா, ஆக. 28 -

பீகார் மாநிலத்தில் வாக்கு அதிகாரப் பயணத்தில் கலந்து கொள்ளச் சென்றுள்ள கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-



**பீகார் வந்தடைந்தேன். மதிப்பிற்குரிய லாலு பிரசாத் அவர்களின் மண் கண்ணில் தீயுடன் என்னை வரவேற்கிறது. களவாடப்பட்ட ஒவ்வொரு வாக்கின் கனத்தையும் மண்ணில் உணர முடிகிறது.**

**அன்பு இளவல்கள் ராகுல்காந்தி, தேஜஸ்வீ மற்றும் சகோதரி திருமிகு பிரியங்கா காந்தி ஆகியோருடன், மக்களின் வலியை எவராலும் தடுத்து நிறுத்த முடியாத ஆற்றலாக மாற்றும் வாக்கு அதிகாரப் பயணத்தில் நானும் இணைந்தேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்நாட்டின் அனைத்து தொடக்கப் பள்ளிகளிலும் காலை உணவுத் திட்டம்!

## முதலமைச்சருக்கு ஆசிரியர் கூட்டணியின் சார்பில் நன்றி!

திருவாரூர், ஆக. 28 -

தமிழ்நாட்டின் அனைத்து தொடக்கப் பள்ளிகளிலும் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி இருக்கும் திராவிடநாயகர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் ரெ. ஈவேரா தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது,

“தமிழ்நாட்டில் கல்வி பயிலும் குழந்தைகளின் உடல் நலன், கல்வி நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற சமூக அக்கறையோடு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முதன்முதலாக பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினமான 15.9.2022 அன்று மாநகராட்சி தொடக்கப்பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை கொண்டு வந்தார். இத்திட்டத்தின் சிறப்பு, பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளிடமிருந்த வரவேற்பு இவைகளின் காரணமாக படிப்படியாக திட்டத்தை விரிவுபடுத்தினார்.

தற்போது ஐந்தாவது கட்டமாக நேற்று முன்தினம் (26.8.25) நகர்ப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளிகளில் இத்திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள்.

இதன் மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் இத்திட்டம் முழுமை பெற்று இருக்கிறது. இத்திட்டத்தின் மூலம் 20 லட்சம் குழந்தைகள் பயன்பெறுகிறார்கள்.

இத்திட்டம் வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு வரப்பட்ட திட்டமல்ல. எதிர்கால சமுதாயம் உடல் நலத்துடனும், கல்வி நலத்துடனும் வளர வேண்டும் என்கின்ற அக்கறையின் காரணமாக கொண்டுவரப்பட்ட திட்டம். முதலமைச்சர் அவர்களால் நேரடி கண்காணிப்பில் திட்டம் செயல்படுத் தப்படுவது கூடுதல் சிறப்பை பெற்றுள்ளது. பசிப்பிணி போக்கியதோடு, கல்வி கற்றலை உயர்த்தும் நோக்கோடு செயல்பட்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

சமூக அக்கறையோடு கொண்டுவரப்பட்ட இத்திட்டம் நூற்றாண்டுகளைக் கடந்தும் மக்களின் மனதில் நிலைத்து நிற்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### நாமக்கல் மாவட்டத்தில்

# முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தொடங்கி வைத்தார்!

நாமக்கல், ஆக. 28 -

நாமக்கல் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ் நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் துவக்க விழா நடைபெற்றது.

விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, தலைமை தாங்கினார், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்து, அவர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விளையாட்டுத் துறைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றவுடன் 2023ம் ஆண்டு முதல் “முதலமைச்சர் கோப்பை” விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும் என அறிவித்து தேசிய அளவிலான போட்டிகளுக்கு இணையாக சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு போட்டிகளுக்காக மொத்த பரிசுத் தொகை ரூ.37 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் வெகு சிறப்பாக நடத்தப்படவுள்ளது.

மேலும் மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கான மொத்த பரிசுத்தொகையாக ரூ.53,40,000/ வழங்கப்படும். இப்போட்டிகளில் வழங்கப்படும் சான்றுகள் மூலம் உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் சலுகைகளும் பெற இயலும்.

எனவே, மாணவ, மாணவியர்கள் உங்களுக்கு பிடித்த விளையாட்டு போட்டியினை தேர்ந்தெடுத்து போட்டிகளில் கலந்துகொண்டு தொடர்ச்சியான வெற்றி பெற வாழ்த்துகிறேன் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் செ.பூபதி, மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அலுவலர் எஸ்.கோகிலா உட்பட துறைசாந்த அலுவலர்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கணைகள் கலந்து கொண்டனர்.



திராவிட நாயகர் தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.12 இலட்சம் மதிப்பில், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முன்பாக கட்டப்பட்ட பயணியர் நிழற்குடைகளை அரசு தலைமைக்கொறடாகா.ராமச்சந்திரன் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில் 26.08.2025 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி என்.எஸ்.நிஷா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி அபிலாஷா கௌர், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஸ்ரீசரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட பலர் உடனிருந்தனர்.



ஈரோடு மாநகராட்சி முத்தம்பாளையம் வீட்டுவசதி வாரியம் பகுதி 1ல் கான்கிரீட் சாலை அமைக்கும் பணியினை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேயர் நாகரத்தினம், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### குடியரசுத் துணைத் தலைவராக சுதர்சன ரெட்டி வந்தால் மட்டுமே

# நாடாளுமன்ற ஜனநாயக முறை காப்பாற்றப்படும்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டி!

நெல்லை, ஆக.28-

நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு எதிர்க்கட்சிகளை செயல்பட விடாமல் தடுக்கிறது.துணை குடியரசுத் தலைவராக சுதர்சன ரெட்டி வந்தால் மட்டுமே நாடாளுமன்றம் ஜனநாயக முறைப்படி நடைபெறும். நக்சல் ஆதரவாளர் என அவரை சொல்லும் பிரதமரும் உள்துறை அமைச்சரும் அவர்களது வரலாற்றை திருப்பிப் பார்க்க வேண்டும் என நெல்லையில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார் .



தமிழக அரசின் காலை உணவு திட்டத்தின் நகர்ப்புற பகுதிகளில் விரிவாக்கம் செய்யப்பட்ட திட்டத்திற்கான தொடக்க விழா (2608 2025) நடைபெற்றது. சென்னையில் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள், பஞ்சாப் முதலமைச்சர் பகவத் மான் உள்ளிட்டோர் காணொலிக் காட்சி வாயிலாக தமிழகம் முழுவதும் தொடங்கி வைத்தனர். தொடர்ந்து நெல்லை பாளையங்கோட்டை செவன்டாலர்ஸ் பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் முஅப்பாவு, மாவட்ட ஆட்சியர் இரா.சுகுமார், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ ஆகியோர் கலந்து கொண்டு திட்டத்தை துவக்கிவைத்து மாணவ மாணவிகளுடன் அமர்ந்து உணவருந்தினர். பேரவை தலைவர் மு.அப்பாவு தனது கரங்களால் குழந்தைகளுக்பு ஊட்டி விட்டு தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். இந்த திட்டம் நெல்லை மாவட்டத்தில் 210 பள்ளிகளில் 13 ஆயிரத்து 115 மாணவர்கள் உணவருந்தும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது ஏற்கனவே இந்த திட்டத்தின் மூலம் நெல்லை மாவட்டத்தில் 804 பள்ளிகளில் 34 ஆயிரத்து 277 பேர் திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

பின்னர் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்திற்கு தமிழகத்திற்கு 2000 கோடி ரூபாய் நிதியை ஒன்றிய அரசு மறுத்துவிட்டது.தமிழக அரசு எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதை முன்னிறுத்தி பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட 4 லட்சம் கோடியில் 50 ஆயிரம் கோடி கல்விக்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது.முன்னாள் ஒன்றிய அமைச்சர் அனுராக் தாகூர் விண்வெளியில் முதன்முதலில் கால் வைத்தது அனுமன் தான் என சொல்லி உள்ளார். இதற்கு பதில் அளித்த பேரவை தலைவர் மத்தியில் ஆளும் பி.ஜே.பி.ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தம் கொண்டவர்கள், பிற்போக்கு சிந்தனையான கருத்துக்களை தான் அவர்கள் பரப்புவார்கள்.இந்தியா கூட்டணி துணை குடியரசுத் தலைவர் வேட்பாளரான சுதர்சன ரெட்டி நக்சல் ஆதரவாளர் என அமித்ஷா கூறியதற்கு நீதி அரசர்கள் கண்டனத்தை தெரிவித்து வருகின்றனர்.

சுதர்சன் ரெட்டி மிகப் பெரிய வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்புகளை எல்லாம் வழங்கி உள்ளார்.அவர் பொதுவான மனிதர், இதனை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. சுதர்சன் ரெட்டி குறித்து பேசி இருப்பதை உள்துறை அமைச்சர் தவிர்த்து இருக்க வேண்டும்.சுதர்சன் ரெட்டி நக்சல் ஆதரவாளர் அல்ல துப்பாக்கியை கீழே போட்டு சரணடையுங்கள் என்று தான் அவர் கூறினார்.சுதர்சன் ரெட்டி மீது விமர்சனம் வைக்கும் பிரதமரும் உள்துறை அமைச்சர்களும் அவர்களது பழைய வரலாற்றை திரும்பி பார்த்தால் அவர்கள் யார் என்று தெரியும்.பா.ஜ.க கூட்டணியின் குடியரசுத் துணை தலைவர் வேட்பாளரான சி.பி ராதாகிருஷ்ணன் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம் கொண்டவர். அவரை நாங்கள் ஆதரிக்க முடியாது. முந்தைய துணை ஜனாதிபதி ஜெகதீஷ் தங்கர் அரசு செய்யும் குற்றத்தை சுட்டி காட்டியதால் தான் அவர் ராஜினாமா செய்ய நேரிட்டது. நாடாளுமன்றம் ஜனநாயக முறைப்படி நடக்கவில்லை. தேர்தல் ஆணையத்தில் நடந்த குளறுபடியை விவாதிக்க கேட்டதற்கு கூட விவாதிக்க ஒன்றிய அரசு மறுக்கிறது. சுதர்சன ரெட்டி துணை குடியரசு தலைவராக வெற்றி பெற்றால் நாடாளுமன்றம் ஜனநாயக முறைப்படி நடக்கும்.முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் பெயரில் திருவாரூரில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என மசோதா நிறைவேற்றப்பட்டது.ஆனால் ஆளுநர் இதுவரை அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. இது போன்று பல மசோதாக்கள் ஆளுநரால் கிடப்பில் போடப்பட்டுள்ளது.ஒன்றிய அரசு அனுமதி பெற்று மூன்று சதவீதம் அதிகமாக கடன் வாங்கி செய்யும் அனுமதி கோரிய நிதி மசோதா அனுப்பப்பட்டுள்ளது.ஆனால் அதுவும் நிலுவையில் தான் உள்ளது. இமாச்சல் பிரதேசம் உள்ளிட்ட பிற மாநிலங்களுக்கு இது போன்ற மசோதாக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வளரக் கூடாது என்பதே ஒன்றிய அரசின் நோக்கம்.அதனால் தொடர்ந்து தமிழகத்திற்கு எல்லா வகையிலும் தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வருகிறார்கள். அமெரிக்க வரி விதிப்பால் தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் ஏற்றுமதி மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு பா.ஜ.க.வின் வெளியுறவு கொள்கை படுதோல்வி அடைந்தது காரணம் என்றார்.

நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், ஆணையாளர் மரு. மோனிகா ராணா, துணை மேயர் ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஜம்மு காஷ்மீரில் கனமழை: நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 30 ஆக உயர்வு!

ஜம்மு, ஆக.28-

தோடா, கிஷ்த்வார் மாவட்டங்கள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ள நிலையில் மீட்பு பணியில் ராணுவம் களமிறங்கியுள்ளது. ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. சில இடங்களில் மேகவெடிப்பு காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதுடன், நிலச்சரிவு ஏற்பட்டு கடுமையான பொருட்சேதத்தையும், உயிர்ச்சேதத்தையும் ஏற்படுத்தியது. மேலும், தோடா, கிஷ்த்வார் மாவட்டங்கள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. வைஷ்ணவி தேவி கோவிலுக்கான யாத்திரையும் நிறுத்தப் பட்டது. இந்த நிலையில், வைஷ்ணவி தேவி கோவில் அருகே கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளது. மாநிலத்தின் பல்வேறு

இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ள நிலையில் மீட்பு பணியில் ராணுவம் களமிறங்கியுள்ளது.

இதனிடையே, ஜம்மு காஷ்மீரின் பல மாவட்டங்களில் இடியுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்ட இளைஞரணியின் சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் நல்லாட்சியின் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம், கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் மத்திய பகுதி, முத்துராஜபுரத்தில், நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கலைமணி பாரதி, இளம் பேச்சாளர் செல்வன் பாலகணபதி சிறப்புரையாற்றினர். கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.